[2022 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்– காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்காக தனியாக விளையாட்டு மைதானம் அமைக்கப்படுமா என்று இங்கே கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒரு Badminton Court அமைக்கப்பட்டு, இப்போது அது செயல்பாட்டில் இருக்கின்றது. மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கின்ற உடற்பயிற்சிக்கூடம் விரைவிலே நவீனப்படுத்தப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தக்கூடிய அளவில் செயல்படுத்தப்படும்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

241—

சுற்றுலாத் தலம்

***5228—திரு. செல்லூர் கே. ராஜூ:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தை சுற்றுலாத் தலமாக அறிவித்து, அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.

2022 மே 6]

மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தை சுற்றுலாத் தலமாக அறிவித்து, கூடுதல் வசதிகள் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளாக மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் தண்ணீர் நிறைந்திருக்கிறது. வைகையாற்றில் எப்போது தண்ணீர் வந்தாலும், மாரியம்மன் தெப்பக்குளம் நிறைகிற மாதிரி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சியில், எடப்பாடியார் அவர்களுடைய முயற்சியில், ஒரு கோடி ரூபாய் செலவிலே தடுப்பணை கட்டப்பட்டு, பனையூர் வாய்க்கால்மூலம் அந்தத் தெப்பக்குளத்திற்கு தண்ணீர் வருகிற மாதிரி செய்திருந்தோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது, இன்றைக்கு மதுரை மக்களுக்கு பொழுதுபோக்கு இடமாக மெரினாவாக காட்சியளிக்கின்ற மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில்* Laser Show *நடத்தினால், மிக அருமையாக இருக்கும்; நல்ல வாய்ப்பாகவும் இருக்கும். இன்று ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *3 வருடங்களாகச் செய்ய முடியவில்லை; செய்து தருவீர்களா என்று கேட்டிருக்கிறீர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *இப்போதுதானே தெப்பக்குளத்தில் தண்ணீர் நிரம்பியிருக்கிறது. அதற்கு வழிவகை செய்திருக்கிறோம். நான்* controversy *ஆக போக விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மதுரை மாவட்டத்திற்கு நல்லதைச் செய்து தருவார்; அவர் இளைஞராக இருக்கிறார்; டாக்டராகவும் இருக்கிறார். விஞ்ஞான ரீதியாக இன்றைக்கு இருக்கிற நவீன யுகத்தில்* Laser Show *நடத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் பொதுமக்கள் வசதிக்காக திருக்கோயில்மூலம் படகு சவாரி விடப்பட்டுள்ளது. உபயதாரர்மூலம் 2 படகுகள் படகு சவாரிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நபர் ஒருவருக்கு ரூ.20/– கட்டணமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 2 மோட்டார் படகுகள் இருக்கின்றன. 1+7 என்ற* capacity*–ல் பயன்பாட்டில் உள்ளன. அவை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. மாண்புமிகு மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. பூமிநாதன் அவர்கள் ஏற்கெனவே கோரிக்கை வைத்துள்ளார். இருப்பினும், அங்கேயிருக்கிற தெப்பக்குளம் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையிடமிருந்து தடையில்லா சான்றிதழ் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு பெற்று, வருங்காலத்தில் சாத்தியக்கூறு இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *முதலில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. இரண்டாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். மதுரையில் எந்தவித பொழுதுபோக்கு இடமும் இல்லை. மதுரையில் 20 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறோம். அங்கு பொழுதுபோக்கு இடங்களே இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கே சிறந்த பொழுதுபோக்கு, அண்ணன் திரு. செல்லூர் ராஜூ என்பது நாட்டிற்கே தெரிந்த விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)*

2022 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மதுரை ஒரு சுற்றுலா நகரமாக இருக்கிறது. ஆனால், அங்கே பொழுதுபோக்கு வசதிகள் இல்லை. சுற்றுலாத் துறை மூலமாக நாள்தோறும் பேருந்துகளை ஏற்பாடு செய்து, மதுரை மாவட்டத்திலிருக்கிற திருக்கோயில்கள் மற்றும் கீழடி அகழ்வாராய்ச்சி நிலையம், சமணர்கள் வாழ்ந்த குகைகள் போன்றவற்றை சுற்றுலாப் பயணிகள் சென்று பார்ப்பதற்கு வசதிகள் செய்து கொடுத்தால், சுற்றுலாத் துறை மேம்படும். அவர்களிடமிருந்து அதற்கான கட்டணங்களை வசூல் செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *வெளியூர் மக்கள் மற்றும் வெளிநாட்டு மக்கள் அதிகளவில் வந்து பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து, 'அது முடியாது' என்று சொல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனைகளை எல்லாம் சொல்லியிருக்கிறார். சுற்றுலாத் துறையை மேம்படுத்த, அவர் சொன்ன ஆலோசனைகள் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும். அதுமட்டுமல்லாமல், நான் நேற்று சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில் சொன்னதைப்போல, 300 இடங்களுக்கு* Master Plan–*பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் மட்டும் 13 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த 13 இடங்களில், 8 இடங்கள் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையினுடைய கோயில்கள்.* Archaeological Survey of India–*ல் 2 இடங்கள்.* State Archaeology Department–*லிருந்து ஓர் இடமும்,* Gandhi Smarak Nidhi–*லிருந்து ஓர் இடமும்,* Forest Department–*லிருந்து ஓர் இடமும் என ஆக மொத்தம் 13 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 300* master plan sites–*லிருந்து ஒவ்வொரு இடத்தையும் தேர்வு செய்து, கண்டிப்பாக*

வருங்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்வளக் கட்டமைப்பிற்கான சர்வதேச விருதை இந்த ஆண்டு காட்டுமன்னார்கோவிலில் அமைந்திருக்கின்ற வீராணம் ஏரி பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கிழக்கே சிதம்பரம் நடராசர் கோயிலும், தெற்கே கங்கைகொண்டான் சோழபுரமும், மேற்கே அருள்மிகு பூவராகசுவாமி ஆலயமும், வடக்கே வள்ளலாரின் சன்மார்க்க மையமும் அமைந்திருக்கின்ற நிலையில், வீராணம் ஏரியைச் சுற்றுலாத் தலமாக உருவாக்கிட ஓர் ஆய்வை மேற்கொள்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று மானியக் கோரிக்கையின்போதுகூட சொன்னேன். அணைக்கட்டு பகுதிகளில், adventure activities செய்வதற்காக ஒரு consultant–ஐ appoint செய்து, அங்கே inspection செய்து கொண்டிருக்கின்றோம். அதில் சென்ற வருடத்தில் மட்டும் 4 அணைகளைத் தேர்வு செய்திருக்கிறோம். கன்னியாகுமரியில் சிற்றாறு அணை–1, சிற்றாறு அணை–2, தென்காசியில் குண்டாறு அணை மற்றும் நீலகிரியில் காமராஜ சாகர் அணைகளைத் தேர்வு செய்திருக்கிறோம். நிச்சயமாக வீராணம் அணையையும் inspection செய்துவிட்டு, எந்தவிதமான adventure activities–ஐ ஏற்படுத்தலாம் என்று பார்த்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியப்படுத்துகிறோம்.